**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| Case No | : | SC - 77/2019 |
| Prosecution Witness | : | PW-1 |
| Name | : | சின்னராஜ் |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 20.08.2028***

***எதிரிகள் 1, முதல் 10 வருகை***

**அசா1 அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் கீழவாசல் பழைய மாரியம்மமன் கோயில் ரோடு சாலைக்கரத்தெருவில் வசிக்கின்றேன். கடந்த 18.01.2018 அன்று இரவு 9.45 மணி அளவில் என் உறவினர் ராஜேந்திரன் நான் என் வீட்டிற்கு முன்பு உட்கார்ந்திருக்கும்போது என்னிடம் ஓடிவந்து என் மகன் அப்பு (எ) ஜெயகாந்தனை பாரில் கலியவர்தன், இலட்-சுமணன், சுரேஷ், முத்தமிழ்செல்வன், பாலமுருகன், தினேஷ், கரிகாலன், வேறு ஒரு தினேஷ், கோபிநாத், அஜித் ஆகியோர் அரிவாள் மற்றும் வாள் வைத்து என் மகனிடம் பிரச்சனை செய்வதாக சொன்னார். சொன்னவுடன் நானும் என் மைத்துனர் ஆரோக்கியமுருகன், மோகன், கணேசன், இளச்செழியன் ஆகியோர்களை அழைத்துக்கெ◌ காண்டு நான் பாருக்கு சென்றேன். அங்கு பாருக்கு போனவுடன் அரிவாள், வாளைச் சுற்றிக்கொண்டு என் பக்கத்தில் விடாமல் தடுத்தனர். என் பிள்ளைகளை ஒண்ணும் செய்ய வேண்டாம் என்று அவர்களிடம் சொல்லி கதறினேன். எதிரி கலியவர்தன் தேவடியாக மகனே நீ இருக்கும் போது நான் வாழ

முடியாது போலிசாரிடம் காட்டி கொடுத்துவிடுவாய் என்று சொல்லி என் பிள்ளையின் தலையிலேயே முதலில் அரிவாள் கொண்டு வெட்டினார். இலட்சுமணனும் என் மகனின் தலையில் வெட்டினார். சுரேசும் தலையில் வெட்டினான். என் மகன் கீழே குப்புற விழுந்துவிட்டான். அனைவரும் சேர்ந்து கை, கால் விரல்களை துண்டுதுண்டாக வெட்டி எடுத்துவிட்டார்கள். வாங்கடா செத்துவிட்டான் என்று இரு சக்கரவாகனத்தை எடுத்துக் கொண்டு 10 பேரும் தனித்தனியாக சென்றுவிட்டார்கள். அதற்கு பிறகு நான் தாலுக்கா காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் **அதசாஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் கொடுத்தபிறகு முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அதசாஆ2.** ஆஜர் எதிரிகள் 10 பேர்தான் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள். என் மகன் அன்று கட்டம் போட்ட அரைக்கை சிகப்பு ஊதா கலந்த கட்டம் போட்ட மேல்சட்டையும் கிரே கலரில் கோடு போட்ட கைலி கட்டிருந்தார். என்னிடம் காட்டப்படும் அரைக்கை சட்டையும் கைலியும் சம்பவத்தன்று என் மகன் அணிந்திருந்த ஆடைகள். அவை முறையே **அ.சா.பொ.1.** மற்றும் **அ.சா.பொ.2**. என்னிடம் காட்டப்படும் இறந்தவரின் ஜட்டி **அ.சா.பொ.3**, ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய 7அரிவாள்கள் மற்றும் 3 வாள்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் **1 3,** மற்றும்**4 தரப்பு குறுக்குவிசாரணை**</u>

என்னை பெண் ஆய்வாளர் விசாரித்தார். எத்தனை தடவை விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று விசாரித்தார்கள் மேலும் காவல்நிலையத்திற்கு அழைத்து விசாரித்தார்கள். காவல்நிலையத்தில் என் மகன் இறந்தபிறகு எவ்வளவு நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். அரிவாள்கள் மற்றும் வாளில் தனிப்பட்ட அடையாளம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சணல் சுற்றப்பட்டிருந்தது. எந்தெந்த அரிவாளை யார்யார் வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் பெரிய அரிவாளை 4பேர் ஆளுக்கொன்று வைத்திருந்தார்கள். போலிசார் விசாரிக்கையில் அரிவாள் மற்றும் வாளை சுற்றிக்கொண்டு என்னை என் மகனிடம் நெருங்க விடாமல் தடுத்தாக

சொன்னேனா என்றால் சொன்னேன். என் மகன் எதுவும் செய்யவேண்டாம் என்று கதறினேன் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். தேவடியா மகனே நீ இருக்குறவரைக்கும் வாழ முடியாது என்ற சொன்னதை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் மகன் குப்புற விழுந்துவிட்டான் என்றும் அவரை துண்டுதுண்டாக வெட்டிவிட்டார்கள் என்ற விவரம் போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். செத்துட்டான் வாங்கடா என்று சொல்லி இருசக்கரவாகனங்களில் சென்றுவிட்டதாக சொன்ன விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் மகன் என்ன நிறத்தில் சட்டை, கைலி அணிந்திருந்தார் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். கணேசன், மோகன், இளஞ்செழியன் எனக்கு மாப்பிள்ளை உறவு. இறந்துபோன அப்பு மீது 20 க்கு மேற்பட்ட வழக்குகள் உள்ளது என்றால் தெரியாது. அவர் பெயரில் கொலை வழக்கு, கொலைமுயற்சி வழக்கு, மற்றும் வழிப்பறி வழக்கு போன்ற வழக்குகள் இருக்கிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கொலை வழக்கு இருந்தது மட்டும் எனக்கு தெரியும். கார்த்தி, ஆனஸ்ட்ராஜ், ஆல்பர்ட் ஆகியோர் என் மகனை கத்தியால் குத்தியதற்கு 2020ல் வழக்கு நடந்தது என்றால் சரிதான். செந்தில் கொலைவழக்கு தீர்ப்பு வந்தவுடன் என் மகன் திருப்பூர் சென்றுவிட்டார் என்றால் இல்லை. செந்திலின் தம்பியுடன் நட்பாகத்தான் பழகி வந்தார். சாட்சிகளின் ஆரோக்கியமுருகன், கணேசன், மோகன், இளஞ்செழியன்ஆகியோரின்வீடு எங்கிருக்கும் என்றால் என் வீட்டிற்கு அருகில்தான் உள்ளது. ராஜேந்திரன் வந்து தகவல் சொல்லும்போது நான் என் வீட்டு வாசலில்தான் இருந்தேன். மீதி சாட்சிகளை அவர்கள் வீட்டிற்கு போய் அழைத்து வந்து சம்பவ இடத்திற்கு சென்றேன். ராஜேந்திரன் தகவல் சொல்லி எவ்வளவு நேரம் கழித்து வீட்டிலிருந்து கிளம்பினேன் என்றால் உடனே கிளம்பிவிட்டேன். 5 நிமிடத்திலேயே கிளம்பி விட்டேன். என் வீட்டிலிருந்து பார் 300மீ தூரம் இருக்கும். பாரிலிருந்து சத்தம் போட்டால் எங்கள் வீட்டில் கேட்குமா என்றால் இல்லை. என் வீட்டிலிருந்து பாருக்கு நாங்கள் 5பேரும் வண்டியில் சென்றோம். என் மகன் காயம் பட்ட இடத்திற்கு நான் செல்லும்போது சுமார் 9.45 மணி இருக்கும். என் மனைவி ஜெயந்தி மருமகள் அனைவரும் சேர்ந்து ஒன்றாக சென்றோமா என்றால் இல்லை. பெண்கள் யாரும் வரவில்லை. அவர்கள் தகவல் தெரிந்து

மருத்துவமனைக்கு நேரடியாக வந்தார்கள். பார் மற்றும் ஒயின்ஷாப் வேறுவேறு கட்டிடமா என்றால் இல்லை ஒரே கட்டிடம். 10 மணிக்கு பார் மூடிவிடுவார்கள் என்றால் 11.00 மணிக்கு மூடிவிடுவார்கள்.10.00 மணிக்கு மேல் பார் திறந்து வைக்க போலிசார் அனுமதி அளிக்கமாட்டார்கள் என்றால் சரிதான். 10.00 மணிக்கு மேல் பாரை மூடி விளக்குகளை அணைத்துவிடுவார்கள் என்றால் அன்று பாரை மூடவில்லை விளக்குகளையும் அணைக்கவில்லை. என் மகன் வெட்டுப்பட்டது பாரின் உள்ளேதான். பாரில் என் மகனைத்தவிர வேறு நபர்கள் மது குடித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் நான் செல்லும்போது யாரும் இல்லை அவர்கள் ஓடிவிட்டார்கள். 10 பேர் ஒரே நேரத்தில் வெட்டினார்களா அல்லது தனித்தனியே வெட்டினார்களா என்றால் மூவர் தலையில் வெட்டினார்கள் என் மகன் கீழேவிழுந்ததும் அனைவரும் சேர்ந்து அவரை வெட்டினார்கள். என்னை சேர்ந்து என் உறவினர் 5 பேர் என் மகன் வெட்டுப்படும்போது சம்பவ இடத்தில் இருந்தோம். நாங்கள் 5 பேரும் இருந்தும் என் மகன் வெட்டுப்படுவதை தடுக்கமுடியவில்லை என்றால் தடுக்கமுடியவில்லை எங்களிடம் ஆயுதங்கள் இல்லை. சாட்சி தானாக அவர்கள் எங்களை பிடித்துக்கொண்டார்கள் என்று சொன்னார். ஆயுதங்களை எதிரிகள் அங்கேயே போட்டு சென்றுவிட்டார்களா என்றால் இல்லை போலிசார்தான் அதை கைப்பற்றினார்கள். என் மகனை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றது யார் என்றால் போலிசுக்கு தகவல் சொல்லி போலிஸ் சம்பவ இடத்திற்கு வந்தபிறகுதான் ஆம்புலன்சில் என் மகனை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். நான் மருத்துவமனைக்கு சென்றேன். என்னுடன் யார் வந்தார்கள் என்றால் நிறையபேர் வந்தார்கள் யார் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் மருத்துவமனைக்கு செல்லும்போது மணி சுமார் 10.45 அல்லது 11.00 மணி இருக்கும். நான் காவல்நிலையம் போகும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் சுமார் 10.30 மணி இருக்கும். பாருக்கு போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் 11.00 மணி இருக்கும். பாருக்கு போலிசார் வந்தபோது என் பையன் வெட்டுப்பட்டது போலிசாருக்கு தெரியும் அங்கு என்னிடம் புகார் எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரை யார் எழுதியது என்றால் நான் பதட்டமாக இருந்ததால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். நான் கையெழுத்து போட்டேன். நான் புகாரை படித்துபார்த்துதான் கையெழுத்து போட்டேன். புகாரில் இலட்சுமணன், சுரேஷ், முத்தமிழ்செல்வன்

ஆகியோர் என் மகனின் தலையில் வெட்டியதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பாருக்கு போகும்போது என்னுடன் எங்கள் தெருக்காரர்கள் என்னுடன் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை பேர் வந்தார்கள் என்று கேள்விபட்டு நிறையபேர் வந்தார்கள். குறிப்பிட்டு எத்தனை பேர் என்று தெரியாது. வெட்டுப்பட்ட இடத்தில் இருந்து காவல்நிலையம் சென்றுவிட்டேன். காவல்நிலையத்திற்கும் என் மகன் இறந்த இடத்திற்கும் உள்ள தூரம் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். புகாரை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதவில்லை என்றும் எழுதாத பேப்பரில்தான் கையெழுத்து போட்டுவிட்டு வந்தேன் என்றும் புகாரில் உள்ள விவரங்களை வழக்கிற்கு ஏற்றாற்போல் போலிசார் தாமாக எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரம், சொன்ன தேதி, புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகன் வெட்டுப்பட்டதற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என் மகனிடம் நட்பாகத்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். என் மகனுக்கு எதிரிகள் அதிகம் என்பதால் அவனை வெட்டியது யார் என்று தெரியாது எதிரிகள் யாரும் என் மகனை வெட்டவில்லை சந்தேகத்தின்பேரில்தான் எதிரிகளின் மீது புகார் கொடுத்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் 6 முதல் 9 வரை, எதிரி 1, 3 மற்றும் 4ன் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.)

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நான் வசிக்கின்ற சாலைக்காரத்தெரு சுமார் 1/4 கி.மீ நீளம் இருக்கும் என்றால் சரிதான், அந்த 1/4 கி.மீ தூரமும் இரு பக்கத்தில் வீடுகள் நெருக்கமாக இருக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான். சாலைக்காரத்தெருவில் இருந்து அண்ணாநகர் 10 லைட்போஸ்ட் தூரம் இருக்கும். அண்ணாநகரில் இருந்து காமராஜர் நகர் 1/4 கி.மீ தூரம் இருக்கும். ஆதிமாரியம்மன் கோயில் மற்றும் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலுக்கும் இடையே 1 மைல் தூரம் இருக்கும். நான் சொல்லுகிற பார் ஆதிமாரியம்மன் கோயில் அருகேதான் இருக்கும் என்றால் சரிதான். சாலைக்காரத்தெருவில் இருந்து புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் வரை தெருவிளக்குகள் கிடையாது என்றால் சரிதான். நான் சொல்லுகிற பார் மெயின்ரோட்டில்தான் இருக்கிறது. என்னிடம் இருசக்கரம் வாகனம் இருக்கிறது நான் ஓட்டுவேன். நான் என் வீட்டிலிருந்து பாருக்கு நடந்து போகவில்லை.

அதுபோன்று புகாரில் சொல்லப்பட்டிருந்தார் அது தவறு என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையிலும் பாருக்கு ஓடிப்போனதாக சொல்லவில்லை. பாருக்கு ஓடிப்போனதாக புகாரில் சொல்லியிருந்தால் அந்த புகார் என்னால் கொடுக்கப்பட்டது இல்லை என்றால் சரிதான். ரஜேந்திரன் பாரில் இருந்து என்னிடம் தகவல் சொல்ல நடந்து வந்துதான் சொன்னார். ராஜேந்திரன் பாரில் இருந்து என்னிடம் வந்து சொல்லும்போது பாரில் தகறாறு செய்துகொண்டிருப்பதாக சொன்னார். நான் போவதற்கு முன்பே பாரில் பணிபுரிந்தவர்கள் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லி போலிசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் தெரியாது. முன்விசாரணை யில் நான் சொன்ன புகார் காவல்நிலையத்தில்வைத்துதான் எழுதப்பட்டது. நான் சொல்ல சொல்ல காவலர் எழுதினார். நான் அரசியல் கட்சியில் பணியில் நீண்டநாள்களாக இருந்தேன் என்றால் சரிதான். நான் அரசியல் கட்சியில் பணியில் நீண்டநாள்களாக இருந்தால் காவல்நிலையத்திற்கு அடிக்கடி செல்லும் பழக்கம் இருக்கிறதா என்றால் இல்லை. எனக்கு ஆய்வாளர் யார் என்றும் காவல் உதவியாளர் யார் என்றும் காவலர் யார் என்றும் வேறுபாடு தெரியும் என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல எழுதிய காவலர் பெயர் எனக்கு தெரியாது. நான் சொல்ல சொல்ல எழுதிய காவலர் சாட்சி கையெழுத்துபோட்டார் என்றால் இல்லை. அதசா1ன் சம்பவத்தை கேள்விபட்டதும் ஓடிச்சென்று பார்த்தததாகத்தான் கண்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுக்க என்னுடன் ராஜேந்திரன் வந்தார். நான் கொடுத்த புகாரில் ராஜேந்திரனிடம் சாட்சி கையெழுத்து வாங்கினாரா என்றால் நான் பார்க்கவில்லை. என் மகன் அவர் மனைவியுடன் தனிக்குடித்தனத்தில் வாழ்ந்தார் நான் என் மனைவியுடன் தனியாக வாழ்ந்தேன். எனக்கு ஒரே மகன்தான். என் மகன் ஊரில் நிறைய பிரச்சனைகள் செய்ததாலும் அவருக்கு எதிராக நிறைய வழக்குகள் இ,ருந்ததால் அவரை தனியாக வைத்திருந்தேனா என்றால் இல்லை. ஒரே வீட்டில் வெவ்வேறு ரூமில் தனியாக இருந்தோம். போலிசார் விசாரணையில் என் மகன் அவருடைய மனைவி குழந்தைகளுடன் என் வீட்டிற்கு அருகே தனியாக தங்கியிருப்பதாக சொன்னேனா என்றால் இல்லை. ஆய்வாளரிடம் அதுபோன்று சொல்லிவிட்டு நீதிமன்றத்தில் தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று நான் என் மகனை எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் இரவு 8.30 மணிக்கு சாப்பிட்டுவிட்டு சென்றான். அவர் தனது மனைவியுடன்தான் சாப்பிட்டார் என்றால் சரிதான். அன்று என் மகன் மது அருந்தவில்லை. சம்பவ நாள் அன்று என் மகன் குடித்திருந்தார்

என்று சொல்வது தவறு என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்து போலிசார் அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை. சம்வத்திற்கு 10 வருடத்திற்கு முன்பிருந்து தஞ்சாவூர் கிழக்கு, மேற்கு மற்றும் தாலுக்கா காவல்நிலையத்தில் என் மகனின் பேரில் நிறைய வழக்குகள் இருந்தது என்றால் சரியல்ல. சாட்சி மறுபடியும் தன் மகனுக்கு வழக்குகள் இருப்பதாக சொல்கிறார். நான் என் மகனுக்கு நிறைய தடவைகள்நீதிமன்றத்தில் ஜாமீன் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றும் நான் நிறைய தடவைகள்நீதிமன்றத்தில் ஜாமீன் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வழக்குகளும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு பிணையில்தான் என் மகன் வெளியே வந்தார் என்றால் சரிதான். என் மகனின் பிரேதத்தை மருத்துவமனைக்கு யார் எடுத்துசென்றார்கள் என்றும் எத்தனை மணிக்கு எடுத்து சென்றார்கள் என்றால் போலிசார் வந்தபிறகு ஆம்புலன்சில் என் மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் என் மகனை வெட்டுப்பட்டபிறகு தூக்கி பார்த்தேன். முதல் விசாரணையில் கை கால்கள் என் மகனை வெட்டியதாகவும் துண்டாக்கியதாகவும் சொல்லியதால் என் மகனை தூக்கும்போது உடல் மட்டும்தான் தூக்கினேனா என்றால் இல்லை. விரல் மட்டும்தான் வெட்டி துண்டாக்கப்பட்டது. நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன சங்கதியை குறுக்குவிசாரணையில் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் மகனை தூக்கும்போது எனது கை கால்கள் வேஷ்டி சட்டைகளில் இரத்தம் படிந்ததா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பிறது நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்து காவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்து என் மகனை ஆம்புலன்சில் ஏற்றும்போதுதான் தூக்கினேன். அதற்கு முன்பு அவரை தூக்கவில்லை. இரத்தக்கரை படிந்த எனது சட்டையிலும் வேஷ்டியையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. 18.01.2018 என் சம்பவ தேதிக்கு இரண்டு நாள்கள் முன்பு தான் என் மகன் வேறு ஒரு வழக்கிலிருந்து நீதிமன்ற பிணையில் வெளியே வந்தார் என்றால் சரிதான். சாலக்காரத்தெருவில் என் மகனுக்கு நிறைய பிரச்சனைகள் இருந்தது என்றால் சரிதான். சாலைக்காரத்தெருவில் உள்ளவர்கள் நிறையபேர் உறவினர்கள் என்றால் சரிதான். சாலைக்காரத்தெரு ஆதிமாரியம்மன் கோயிலுக்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 3 லிருந்து 4 கி.மீ தூரம் இருக்கும். நான் காவல்நிலையத்தில் நான் 10 நிமிடம்தான்

இருந்தேன். நான் போய் முதலில் பெண் காவல் ஆய்வாளரிம் புகார் கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கையில் பெண் காவல்தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார். இந்த வழக்கில் உண்மையான புகார் மறைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ராஜேந்திரன் என்னிடம் சொல்லி நான் சம்பவ இடம் செல்லும்போது எதிரிகள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவே இல்லை என்றும் நான் முன் விசாரணையில் சம்பவத்தை பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்வதுபோல் எந்த சம்பவும் நடக்கவில்லை என்றும் எனது மகனுக்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள் என்றும் என்னுடைய மகனின் இறப்பிற்கு ஆஜர் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும், நான் சொல்லும் சம்பவத்தன்று என் மகன் நிறைய குடித்திருந்தார் என்றும் அவரை அன்றைய தினம் நான் பார்க்கவில்லை நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**எதிரிகள் 5 மற்றும் 10 தரப்பு குறுக்குவிசாரணை**

இந்த வழக்கின் சாட்சி சங்கிலி முத்து மகன் சாமிநாதன், சாலைக்காரத்தெரு என் உறவினர் என்றால் சரிதான். சாட்சி மாதுரையான் மகன் இளவரசன் சாலைக்காரத்தெரு என் உறவினர் என்றால் சரி. சாட்சி ரமேஷ் த/பெ தியாகராஜன் என்னுடைய உறவினர் என்றால் சாட்சி செல்வேந்திரன் த/பெ கோவிந்தராஜன் என்னுடைய உறவினர் என்றால் சரி. இந்த வழக்கில் பயன்படுத்திய ஆயுதங்களுக்கான குறிப்பிட்ட அடையாளங்கள் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. என்றால் சரிதான். என்ன ஆயுதங்கள்என்று மட்டும் சொன்னேன். சம்பவத்திற்கு பிறகு இன்றுதான் இந்த ஆயுதங்களை பார்க்கின்றேன். போலிசிடம் நான் கைப்பட எழுதியோ அல்லது என் உறவினர் எழுதியோ எழுத்துமூலமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். என் வீட்டிலிருந்து சம்பவ இடம் சுமார் 2 கி.மீ தூரம் என்றால் சரிதான். என் மகன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று வெட்டுப்பட்டு கீழே விழுந்ததும் தூக்கி பார்த்து முதல் உதவி செய்ய முயற்சித்தேனா என்றால் இல்லை. சாட்சி ஆரோக்கிய முருகனின் அக்காவைத்தான் நான் திருமணம் செய்துள்ளேன். அவர் சம்பவ காலத்தில் இராம்நாத் ே◌ஹாட்டலில் செக்யூரிட்டியாக இருந்தாரா என்றால் இல்லை. சாட்சி மோகன் தோட்டக்கலையில் பெரியகோயிலில் வேலையில் இருந்தார் என்றும் இரவு

9 – 10.00 மணி வரை வேலையில் இருப்பார் என்றால் அவர் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் செக்யூரிட்டி வேலை செய்துவந்தார். சாட்சி இளஞ்செழியன் சம்பவ காலத்தில் PLA ே◌ஹாட்டலில் செக்யூரிட்டியாக வேலை பார்த்தார் என்றால் இல்லை. சாலைக்காரத்தெருவில் வேறு மதத்தினரை சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. என் மதத்தை தவிர வேற்று மதத்தினரும் அங்கு இருக்கிறார்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு என் உடன் வந்த சாட்சிகள் என் மகனை தூக்கி முதலுதவி செய்ய முயற்சித்தார்களா என்றால் இல்லை. நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டோம். இந்த வழக்கு என் உறவினர்களை மட்டுமே வைத்து பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு எ ன்றால் சரியல்ல. இரவு 12.00 மணிக்கு மேல் என் மகன் இறந்ததாக கேள்விபட்டு அதன்பிறகு பலருடைய ஆலோசனையின் அடிப்படையில் இந்த புகாரானது காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் தவறு. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரவு ஒயின்ஷாப்பில் அதிகமாக மது அருந்தி அதனால் அங்கு இருந்தவர்களிடம் ஏற்பட்ட தகறாறு காரணமாக இந்த சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது என்னுடன் சாட்சிகளும் உடன் வந்தார்கள். சாட்சிகளை காவல்நிலையத்தில் போலிசார் விசாரித்தார்களா என்றால் சாட்சிகள் காவல்நிலையத்தில் சம்பவத்தை பற்றி சொன்னார்கள். இந்த வழக்கில் சம்பவத்தை பற்றி தெரியாமல் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை**

சம்வத்திற்கு முன்பு என் மகன் நீதிமன்றத்தினை எந்த வழக்கிற்கு வெளியே வந்தார் என்றால் ஆஜர் எதிரி சுரேஷ் ற்கும் என் மகனிற்கும் இருந்த பிரச்சனை சம்பந்தமான வழக்கிற்கு பிணையில் வந்தார். இருவரும் மொட்டை பெட்டிசன் சம்பந்தமாக அந்த வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு பிணையில் வெளியே வந்தார்கள்.

**எதிரி 1, 3 , 4 தரப்பில் குறுக்குவிசாரணை**

மொட்டை பெட்டிசன் பெயரில் என் மகன் எதிரி சுரேஷ் இருவரும் ஒரே நேரத்தில் ஒரே வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருவரும்

ஒரே நேரத்தில் பிணையில் வந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு சமயத்தில் என் மகனுக்கும் சுரேசிற்கும் ஒருவருக்கொருவர் தகராறு இல்லை இருவருமே ஒரே வழக்கில்தான் கைது செய்யப்பட்டு பின்பு பிணையில் விடப்பட்டார்கள்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- P.R. சுப்ரஜா

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.